அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025
# தமிழ் - ஆண்டு 7

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

மாந்தன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலத்திலேயே குழல், முழவு, யாழ் ஆகிய இசைக்கருவிகளைக் கண்டுபிடித்துவிட்டான். புல் இனத்தைச் சேர்ந்த மூங்கில் தண்டின் துளையில், காற்று நுழையும்போது இனிமையான இசை பிறந்தது. அதிலிருந்தே புல்லாங்குழலை உருவாக்கினான். விலங்குத் தோலினால் ஆக்கப்பட்ட தோற்கருவிகள் முழவுகள் என அழைக்கப்பட்டன. வில்லில் இருந்து அம்பு விடும்போது வில்லில் கட்டப்பட்ட ‘நாண்’ இன்னிசை எழுப்பியது. அதிலிருந்தே யாழ் என்னும் இசைக்கருவி தோன்றியது. யாழ், வில் வடிவிலேயே அமைந்திருக்கும். இந்த யாழே இக்காலத்தில் வீணையாக மாற்றம் பெற்றுள்ளது. வீணையானது பதினேழாம் நூற்றாண்டிலேயே இப்போதிருக்கும் வடிவத்தைப் பெற்றுவிட்டது. வீணையுடன் இணைந்து ஒத்திசையாக தம்புரா, தவில் போன்றன இசைக்கப்படுகின்றன.